# எமது நோக்கு

“சுயாதீன,இறைமையுள்ள மற்றும் சௌபாக்கியமிக்கதோர் இலங்கை”

# எமது செயற்பணி

“இலங்கை மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் பொருட்டும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களிடையே சிறந்ததோர் ஒருங்கிணைப்பினைப் பேணி நல்லாட்சிமிக்க சிறந்ததோர் அரச இயந்திரமொன்றிற்காக தேவையான சிறந்த தலைமைத்துவத்தை வழங்குதல்”

# உள்ளடக்கம்

1 கடமைகள் மற்றும் அலுவல்கள்
2 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு
3 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு
4 பிரதம அமைச்சர் அலுவலகத்தின் பதவியணி
5 நடைமுறைப்படுத்திய விேட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்

ஐ மஹிந்தசிந்தனை தொலை நோக்கு தேசிய கொள்கையுடன் இணைந்த வகையில் கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் எண்ணக்கருவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற "பொருளாதார அபிவிருத்தியுடன் உயர் பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்"

ஐஐ 2008 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்ற விளைதிறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தல்

11ஐ"தேசத்திற்கு மகுடம்" அபிவிருத்திக் கண்காட்சியுடன் இணைவான வகையில் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டம்

1எ. 2008 ஆம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் பிரஜைகள் - சேவை பெறுநர் பட்டயம் ஊடாக சமூக சேவைகள் சம்பந்தமாக அறிவுறுத்தல் மற்றும் சேவை வழங்கலை வினைதிறன் மிக்கதாக மாற்றுதல்

எ. 2008 – 2015 சார்க் சமூக பட்டயம் சம்பந்தப்பட்ட நடைமுறைத் திட்டத்தினை தொடர்பு படுத்தல்


6 கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு சுற்றுப்பயணம், இராஜதந்திரிகளுடனான சந்திப்பு, கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்கள் ஆகியவை
7 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மாநாடுகள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்,புலமைப்பரிசில்கள் என்பவற்றுக்காக நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கான அனுமதியை வழங்குதல்
8 அமைச்சரவை நிருபம்,பாராளுமன்ற அறிக்கை மற்றும் சட்ட மூலங்கள் தயாரித்தல், முன்வைத்தல் மற்றும் பாராளுமன்ற வினாக்களுக்கு பதில் அளித்தல்
9 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் விருத்தி
10 மனித வள அபிவிருத்தி
11 2012 ஆம் ஆண்டிற்கான செலவு சம்பந்தமான அறிக்கை

## 1) கடமைகள் மற்றும் அலுவல்கள்

பிரதம அமைச்சரின் அலுவலகம் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதம அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவல்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாகும். அதனூடாக நடைபெறும் அலுவல்களை கீழ் கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- இலங்கையின் அரச சேவையில் இரண்டாவது அலுவலகம் என்ற முறையில் மற்றைய எல்லா அரச நிறுவனங்களுக்கும் தேவையான வழிகாட்டலினைப் பெற்றுக் கொடுத்தல்
- கௌரவ பிரதமர் தலைமை வகிக்கும் பல்வேறு குழுக்கள் மற்றும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்கல் மற்றும் ஒருங்கிணைப்பு.
- சகல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றை ஒருங்கிணைத்து மக்களுக்கு சிறந்த சேவையொன்றினை வழங்குதல்.
- கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் வெளிநாட்டு தூதுக் குழுக்கள் வெளிநாட்டு தூதுவராலய அதிகாரிகளுடன் கலந்தரையாடல்களை மேற்கொள்வதற்குத் தேவையான வசதிகளை ஒழுங்கு செய்து கொடுத்தல்.
- பாராளுமன்ற வினாக்களுக்கு பதிலளித்தல், அரசாங்க கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமையாக ஒத்துழைத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களினால் முன்வைக்கப்படுகின்ற பாராளுமன்ற சட்டமூலங்களுடன் தொடர்புடைய விடயங்களை மேற்கொள்ளல்.
- சார்க் சமூக பட்டயத்தின் செயற்பாடு சம்பந்தமான நடவடிக்கையை ஒழுங்குபடுத்தல் மற்றும் பின்னூட்டல் பணிகள்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதியினைப் பெற்றுக் கொடுத்தல்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்களின் வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் தொடர்பான அலுவல்களின் ஒருங்கிணைப்பும் வழிகாட்டலும்.
- கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் அரச மற்றும் தேசிய விழாக்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் ஊடக பணிகளை மேற்கொள்ளல்.
- பிரதம அமைச்சர் அலுவலகத்துடன் தொடர்புடைய நிருவாக மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல்.
- பிரதம அமைச்சர் அலுவலகம், பிரதம அமைச்சர் அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் ஓய்வு விடுதி என்பவற்றின் பராமரிப்புப் பணிகள்.
- பலதரப்பட்ட சமூக உபசரணை சேவைகளுக்குத் தேவையான பங்களிப்பினைப் பெற்றுக்கொடுத்தல்.
- பொருளாதார அபிவிருத்தியுடன் உயர் பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

# Organizational Chart of Prime Minister's Office



## 3) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிருவாக கட்டமைப்பு

- பிரதம அமைச்சர் அலுவலகம்
- பிரதம அமைச்சரின் பிரத்தியேகப் பதவியணி
- பிரதம அமைச்சரின் செயலாளர் அலுவலகம்
- மேலதிக செயலாளர் அலுவலகம்
- நிருவாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- ஊடகப் பிரிவு
- வழங்கல் மற்றும் களஞ்சியப் பிரிவு
- போக்குவரத்துப் பிரிவு
- பாதுகாப்புப் பிரிவு

4)

**பிரதம அமைச்சர் அலுவலகம் - பதவியணி விபரம்**
**நிரந்தரப் பதவியணி 2012.01.01 – 2012.12.31**

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்குத் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பிரதமரின் செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மேலதிக செயலாளர் | 1 | 1 | 0 |
| 3 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 2 | 2 | 0 |
| 4 | உதவிச் செயலாளர் | 7 | 5 | 2 |
| 5 | கணக்காளர் | 1 | 1 | 0 |
| 6 | கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வு) | 1 | 1 | 0 |
| 7 | உதவி.்.பிரதி பணிப்பாளர் (இ.திசே.) | 1 | 0 | 1 |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 9 | மொழி பெயர்ப்பாளர் | 2 | 2 | 0 |
| 10 | ஆவணப் பொறுப்பு அலுவலர் | 1 | 0 | 1 |
| 11 | ஒழுங்கு மரபு அலுவலர் | 1 | 1 | 0 |
| 12 | அரச முகாமைத்துவ உதவியாளர் | 42 | 42 | 0 |
| 13 | தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் | 1 | 1 | 0 |
| 14 | தொலைக்காட்சி தொழில்நுட்பவியலாளர் | 1 | 0 | 1 |
| 15 | வரவேற்பாளர் | 1 | 0 | 1 |
| 16 | புத்தகம் கட்டுபவர் | 1 | 1 | 0 |
| 17 | தொலைபேசி ஊழியர் | 2 | 2 | 0 |
| 18 | தொலைக்காட்சி சேவை உதவியாளர் | 2 | 2 | 0 |
| 19 | வாகன சாரதி | 26 | 22 | 4 |
| 20 | தலைமை அலுவலக விடய உதவியாளர் | 1 | 1 | 0 |
| 21 | அலுவலக ஊழியர் சேவை | 34 | 34 | 0 |
| | **மொத்தம்** | **130** | **120** | **10** |

# பிரத்தயேகப் பதவியணி
## 2012.01.01 – 2012.12.31

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப் பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்கும் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பிரத்தியேகச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 2 | மக்கள் தொடர்பு செயலாளர் | 1 | 1 | 0 |
| 3 | இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 4 | ஊடக செயலாளர் | 1 | 1 | 0 |
| 5 | இணைப்புச் செயலாளர் (தொழிற்சங்கம்) | 1 | 1 | 0 |
| 6 | இணைப்புச் செயலாளர் (பாராளுமன்ற விவகாரம்) | 1 | 1 | 0 |
| 7 | அந்தரங்க உதவியாளர் | 1 | 1 | 0 |
| 8 | சுருக்கெழுத்தாளர்(ஆங்கிலம்∴தமிழ்) | 2 | 1 | 1 |
| 9 | சுருக்கெழுத்தாளர்(சிங்களம்) | 2 | 2 | 0 |
| 10 | தட்டெழுத்தாளர்(சிங்களம்) | 3 | 1 | 2 |
| 11 | தட்தெழுத்தாளர்(ஆங்கிலம்) | 2 | 0 | 2 |
| 12 | எழுதுவினைஞர் | 9 | 8 | 1 |
| 13 | சாரதி | 9 | 9 | 0 |
| 14 | அலுவலக விடய உதவியாளர் | 4 | 3 | 1 |
| | **மொத்தம்** | **38** | **31** | **7** |

# தற்காலிகப் பதவியணி

## 2012.01.01 – 2012.12.31

| இலக்கம் | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | தற்போது இருக்கும் எண்ணிக்கை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஆலோசகர் (வெளிநாட்டு விவகாரம்) | 1 | 0 | 1 |
| 2 | ஆலோசகர்(கௌரவ பிரதமர் மற்றும் புத்தசாசனம்) | 1 | 1 | 0 |
| 3 | பிரதம அமைச்சரின் செயலாளரின் இணைப்புச் செயலாளர் | 1 | 1 | 0 |
| 4 | அலரி மாளிகையின் முகாமையாளர் | 1 | 0 | 1 |
| 5 | சமூக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 6 | அந்தரங்கப் பாதுகாவலர் | 5 | 5 | 0 |
| 7 | செய்தி அலுவலர் | 1 | 0 | 1 |
| 8 | ஊடக இணைப்பாளர் | 1 | 0 | 1 |
| 9 | செய்திப் பதிப்பாசிரியர் | 2 | 2 | 0 |
| 10 | புகைப்படப்பிடிப்பாளர் | 1 | 1 | 0 |
| 11 | சமையற்கலை ஆலோசகர்(அலரி மாளிகை) | 1 | 0 | 1 |
| 12 | துலைமைச் சமையற்காரர் | 1 | 0 | 1 |
| 13 | பங்களா பொறுப்பாளர் | 3 | 3 | 0 |
| 14 | உதவி பங்களா பொறுப்பாளர் | 2 | 2 | 0 |
| 15 | சமையற்காரர் (நுவரெலியா) | 1 | 0 | 1 |
| 16 | உத்தியோகபூர்வ இல்ல உதவியாளர் | 8 | 8 | 0 |
| 17 | வீட்டுப் பணியாளர் | 2 | 2 | 0 |
| 18 | உபசரிப்பு விவகார,கட்டட பராமரிப்பு பொறுப்பாளர் | 1 | 0 | 1 |
| 19 | வாகனம் கழுபுபவர் | 2 | 2 | 0 |
| | **மொத்தம்** | **36** | **28** | 8 |

5)

## நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள்

(i) ''மஹிந்த சிந்தனை தொலைநோக்கு'' தேசிய கொள்கைத் திட்டத்துடன் சமாந்தரமான வகையில் கௌரவ பிரதம அமைச்சரின் எண்ணக்கருவின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதார அபிவிருத்தியுடன் உயர்பண்பு மிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்.

### 1. அறிமுகம்

மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் கூறப்பட்டதன் பிரகாரம் இலங்கையை ஆசியாவின் புதுமையாக மாற்றும் அடிப்படை எண்ணக்கருவுக்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்திக்கான தேவையும் நிலவுகின்றது. அதற்குத் துணைபுரியும் வகையில் பொருளாதார அபிவிருத்தியுடன் உயர்பண்புமிக்க சமூகமொன்றின் நிமித்தம் இலங்கை மக்களிடையே நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதன்படி, பல்வேறு தொனிப்பொருள்களில் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 2. எண்ணக்கரு

மஹிந்த சிந்தனை தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மனிதனை பௌதீக ரீதியாக மட்டுமன்றி, ஆன்மீக ரீதியாகவும் கட்டியெழுப்புவதற்காக பக்தியுடன் அறிவு ஞானத்தையும் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இதற்காக பெற்றோர் – பிள்ளைகள், கணவன் - மனைவி, ஆசிரியர் – மாணவர், முதலாளி – தொழிலாளி, நிர்வாகி – நிர்வகிக்கப்படுபவர் போன்ற சகல தொடர்புகளையும் சிறந்த மற்றும் பயனுடையவைகளாக மாற்றி விரக்தி மற்றும் நம்பிக்கையின்மை என்பவற்றை உள்ளத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும். அதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியுடன் இணைவான வகையில் சமூக அபிவிருத்தியினையும் ஏற்படுத்தி பாதுகாப்பான சமூகமொன்றினை இந்த நாட்டினுள் கட்டியெழுப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3. தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம்

1. தேசப்பற்றுமிக்க உணர்வுகளைக் கட்டியெழுப்புதல்
2. சூழலை நேசித்துச் செயற்படல்
3. சுய ஒழுக்கமுள்ள சமூகமொன்றைத் தோற்றுவித்தல்

### 4. நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்

- தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் சமாந்தரமான வகையில் மொனராகலை மாவட்டப் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையில் நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்தல் என்ற கருப்பொருளில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டி நடாத்தப்பட்டது.

- ''எந்நேரமும் சுத்தத்தைப் பேணுவோம் நண்பனே'' என்ற தொனிப்பொருளின் அடிப்படையில் பாடசாலை மாணவ, மாணவிகளுக்கிடையில் 'சுத்தம்' சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

- நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் நோக்கில் 12 பாகங்களைக் கொண்ட ஓரங்க நாடகத் தொடர் ‘‘பியகெடபெல’’ எனும் பெயரில் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது அவை சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றது.

- ‘சிரித் மல்தம்’ என்ற காவியத்தை காட்சிப்படுத்தப்பட்ட காவியமாக இறுவட்டு தயாரித்து இலங்கையில் சகல பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இது சம்பந்தமாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தொலைக்காட்சி ஊடகங்களினூடாக நல்லெண்ண மனப்பான்மைகளை விருத்தி செய்யும் செய்திகளை குறுகிய நேரக் காட்சிகளின்(Video Clips) மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்கான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

- ‘‘நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு’’ எனும் கருப்பொருளை மையமாக வைத்து, வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் நல்லெண்ண மனப்பாங்குடன் செயற்படுவதனூடாக எவ்வாறு ஒரு நற்பிரஜையாக வாழலாம் என்பது சம்பந்தமாக அனுபவமிக்க எழுத்தாளர் சோமவீர சேனாநாயக்க அவர்களின் மூலம் எழுதப்பட்ட புத்தகம் ஒன்றை பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பதுளை மாவட்டத்தின் மஹியங்கனை பிரதேசத்தில் கஷ்டப் பிரதேச பாடசாலைகளை இணங்கண்டு அப்பாடசாலை மாணவர்களிடையே நல்லெண்ண மனப்பாங்குகளை விருத்தி செய்யும் நோக்கில் நிகழ்ச்சித் திட்டமொன்றினை நடைமுறைப்படுத்தியதுடன் அம்மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பெறுமதிமிக்க பாடசாலை உபகரணங்கள்,அகராதிகள் என்பன வழங்கப்பட்டன.

- ‘‘நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு’’ எனும் கருப்பொருளை மையமாக வைத்து, இலங்கை மக்களிடையே பண்பாடு, சுய ஒழுக்கம்,தேசாபிமானம்,சூழலுடன் இணைந்து செயற்படல் என்பனவற்றை விருத்தி செய்யுமுகமாக பெற்றோர் – பிள்ளைகள், கணவன் - மனைவி, ஆசிரியர் – மாணவர், முதலாளி – தொழிலாளி, நிர்வாகி – நிர்வகிக்கப்படுபவர் போன்ற அனைத்துத் தரப்பினருக்கும் நல்லெண்ண மனப்பாங்குகள் பற்றிய முன்மாதிரிகளை வழங்கும் நோக்கில் 2012, ஏப்ரல் மாதம் முதல் வார நாட்களில் தினமின,திவயின,லங்காதீப,லக்பிம போன்ற சிங்களப் பத்திரிகைகளிலும் தினகரன்,தினக்குரல் போன்ற தமிழ் பத்திரிகைகளிலும் ‘‘கார்ட்டூன்’’ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

- அனுபவமிக்க எழுத்தாளர் சோமவீர சேனாநாயக்க அவர்களினால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட‘‘நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு’’ எனும் நூலின் முதற் பதிப்பு அமைச்சுக்கள், திணைக்களங்கள், சட்டமயப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

- சிறு பிள்ளைகளின் நல்வாழ்வுக்குக் கைகொடுக்கும் வகையில் திருமதி சிbபில் வெத்தசிங்ஹ அவர்களின் மூலம் சிறுவர்களுக்கான கையேடு ஒன்றினை எழுதி வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சோமவீர சேனாநாயக்க அவர்களினால் சிங்கள மொழியில் எழுதப்பட்ட "நல்லதோர் உள்ளம் - பலமிக்கதோர் நாடு" எனும் நூலின் தமிழாக்கத்தினை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(ii) 2008 ஆம் ஆண்டில் இருந்து பிரதம அமைச்சர் அலுவலகத்தில் நடைமுறைப்படுத்தப்படும் உற்பத்தித்திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2012 ஆம் ஆண்டில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது.**

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உற்பத்தித்திறன் விருது – 2009 போட்டியில் அரச பிரிவில் அமைச்சுக்களுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு விஷேட திறமை விருதுக்கான சான்றிதழை பிரதம அமைச்சர் அலுவலகம் பெற்றுக்கொண்டதன் பின்னர் அடுத்த கட்டமாக 2013 ஆம் ஆண்டில் உற்பத்தித்திறன் தங்கப் பதக்க விருதினை இலக்காகக் கொண்டு கீழ்க்குறிப்பிடப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

1. அலுவலகத்தின் நோக்கு மற்றும் செயற்பணியினை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பெறுமதியினை உணர்ந்து செயற்படும் ஆளணியினருடன் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
2. தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி தற்போது நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளைச் சீர்செய்யவும் வினைத்திறன் மிக்கதாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
3. ஆளணியில் சிந்தனை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அலுவலக சூழல் மற்றும் வெளியார் தொடர்புகள் உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.
4. அலுவலகத்தினுள் செயலமர்வுகளை நடாத்துவதன் ஊடாக தர வட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான செயன்முறை அறிவு மற்றும் செய்முறை சம்பந்தமாக தெளிவு வழங்கப்பட்டுள்ளது.
5. ஆளணிக்கு உற்பத்தித் திறன் சம்பந்தமான பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

(iii) **தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியுடன் இணைவான நிகழ்ச்சித் திட்டங்கள்.**

வருடாந்தம் தேசிய சுதந்திர தின நிகழ்ச்சித்திட்டங்களுடன் சமாந்தரமான வகையில் நடைபெறும் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சி 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத முற்பகுதியில் அனுராதபுரம் மாவட்டத்தில் நடைபெற்றது.அதன் பிரகாரம் இக் கண்காட்சிக்கு பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பிரதம அமைச்சர் அலுவலக காட்சி மண்டபத்தை நிர்மாணித்தல் பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

2012 ஆம் ஆண்டின் தேசத்திற்கு மகுடம் அபிவிருத்திக் கண்காட்சியுடன் சமாந்தரமான வகையில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலக மற்றும் மாவட்ட மட்டத்தில பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை மற்றும் சித்திரப் போட்டியை நடாத்தி தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வைபவத்தின் போது கௌரவ பிரதம அமைச்சரின் தலைமையில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(iv) **2008 ஆம் ஆண்டு முதல் பிரஜைகள் ∴ சேவை பெறுநர் பட்டயம் ஊடாக சமூக சேவைகள் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் சேவைகள் வழங்கலை வினைதிறன் மிக்கதாக மாற்றுதல்.**

**நோக்கம்:**

- இதன் மூலம் அரச சேவைகளை வழங்கும் முறைகளின் தரத்தை தொடச்சியாக அதிகரித்தல்.
- வழங்கப்படும் சேவைகளின் தரம் சம்பந்தமாக மற்றும் அந்த தரத்திற்கேற்ப சேவைகள் வழங்கப்படாவிடின் பிரஜைகள்∴சேவை பெறுநர்களினால் மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாக இணக்கப்பாட்டிற்கு வரல்.
- செலுத்தப்படும் வரிப்பணத்திற்கேற்ப பிரஜைகளுக்கு∴சேவை பெறுநர்களுக்கு சிறந்த மற்றும் வினைதிறனுடைய சேவையை வழங்குவதற்கான கடமைப்பாட்டை உறதிப்படுத்தல்.
- வழங்கப்படும் சேவைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் அரச ஊழியர்களின் கடமைகளை உறுதிப்படுத்தல்.
- சட்டம்,ஒழுங்கு விதிகள் மற்றும் அவற்றை செயற்படுத்தும் முறைகள் சம்பந்தமாக சேவை பெறுநர்களிடையே தெளிவினை ஏற்படுத்தல்.
- பிரஜைகள்∴சேவை பெறுநர்கள் தமது சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் போது அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக அதளிவை ஏற்படுத்தல்.

(v) **2008 – 2015 சார்க் பட்டயம் சம்பந்தப்பட்ட நடை முறைத்திட்டத்தை தொடர்பு படுத்தல்.**

- தெற்காசியாவில் வாழும் மக்களின் நலனோம்புகை மேம்பாடு மூலம் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்கினைக் கொண்ட சார்க் சமூக பட்டயத்தின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக தேசிய நடைமுறைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் நோக்கங்களை நடை முறைப்படுத்துவதற்கு குறித்த நேர்வரிசை அமைச்சு மற்றும் ஏனைய அரச,அரச சார்பற்ற அமைப்பக்களின் உதவியுடன் இலங்கையின் நடைமுறைத்திட்டத்தை தொடர்பு படுத்தும் செயலை பிரதம அமைச்சரின் அலுவலகம் மேற்கொள்கின்றது. குறித்த கால எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய நிச்சயிக்கப்பட்ட குறிக்கோள் மற்றும் இலக்குடன் இலங்கைக்கு மிக வேண்டிய சார்க் சார்க் சமூக பட்டயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது இதன் நோக்கமாகும்.
- 2008 – 2015 நடைமுறைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட காரணங்களுள் கீழ் காணப்படும் விடயங்கள் மீது கவனம் செலுத்தப்படும்.

    1. வறுமை
    2. இளைஞர்கள்
    3. பெண்கள்
    4. சிறுவர்கள்
    5. கல்வி

- இந்த பிரதான விடயங்களுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தி செயற் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படும்.
- செயல்திட்டத்தினை மிக இலகுவாக பரிசீலனை செய்யுமுகமாக அதன் உள்ளடக்கங்களின் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

## 6) கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயங்கள் சம்பந்தப்பட்ட விபரம்

வெளிநாட்டு விஜயம் - இல்லை

**கௌரவ பிரதம அமைச்சர் அவர்களைச் சந்திப்பதற்கு வருகை தந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சம்பந்தமான விபரம்**

2012.01.01 – 2012.12.31

| திகதி | வெளிநாட்டு அரச பிரதிநிதியின் பெயர் | நாடு |
|---|---|---|
| 2012.01.14 | ஈரான் தூதுவர் அதிமேதகு மொஹமட் நபி ஹஸானி போர் | ஈரான் |
| 2012.01.17 | இந்திய வெளிவிவகார அமைச்சர் கௌரவ எஸ்.எம்.கிருஷ்ணா தலைமையிலான தூதுக்குழு | இந்தியா |
| 2012.01.21 | எகிப்துக்கான இலங்கை தூதுவராக நியமனம் பெற்ற திரு.எஸ்.எஸ்.கணேகம அவர்கள் | இலங்கை |
| 2012.02.02 | சைப்ரஸ் நாட்டுத் தூதுவர் அதிமேதகு நப்ஸிகா கொஉஸ்ட் | சைப்ரஸ் |
| 2012.02.14 | பிலிப்பைனுக்கான இலங்கை தூதுவர் அதிமேதகு நாவலகே Bபெனட் குரே தலைமையிலான தூதுக்குழு | பிலிப்பைன் |
| 2012.02.14 | பொதுநலவாய பாராளுமன்ற தலைர்களுக்கான நிறைவேற்றுக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அதிமேதகு சேர் எலன்ஹெஸல்ஹர்ட் மற்றும் பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் செயலாளர் நாயகம் கலாநிதி விலியம் எப்.ஷிஜா | பொதுநலவாய நாடுகள் அமைப்பு |
| 2012.03.06 | இந்திய நாட்டு இஸ்லாம் மார்க்க அறிஞர் மௌலவி ஏ.பீ.அபூபக்கர் அவர்கள் | இந்தியா |
| 2012.04.25 | தாய்லாந்து நாட்டுத் தூதுவர் அதிமேதகு திரு.பொல்தெஜ் சொராவட் அவர்கள் | தாய்லாந்து |
| 2012.04.27 | வர்ல்ட் பேரட் போ ப்ரொக்சிமிட் ஒப் இஸ்லாமிக் ஸ்கூல் ஒப் தோர்ட் அமைப்பின் செயலாளர் நாயகம் கௌரவ ஆயதுல்லா மஹ்மூத் அலி டஸ்கிரி அவர்கள் | ஈரான் |
| 2012.07.25 | ரஷ்யத் தூதுவர் அதிமேதகு விலடிமீர் பீ.மிகெலவ் அவர்கள் | ரஷ்யா |

**கூட்டங்கள்:**

| திகதி | வெளிநாட்டுப் பிரதிநிதியின் பெயர் | நாடு |
|---|---|---|
| 2012.01.16 | கட்டார் நாட்டுத் தலைவர் அதிமேதகு ஷிக் ஹமாட் பின் காலிபா அல்தானி அவர்களை வழியனுப்புமுகமாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்ற மரியாதை அணிவகுப்பு வைபவத்தில் கலந்து கொண்டமை | கட்டார் |

## 7) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு மாநாடுகள்∴கருத்தரங்குகள்∴ செயலமர்வுகள்∴ புலமைப்பரிசில்கள் என்பவற்றிற்காக நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கான அனுமதியை வழங்கல்

- ❖ கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும்போது நாட்டை விட்டு வெளியேறுவதற்காக அ.நி.சு.21∴2007 இன் பிரகாரம் கௌரவ பிரதம அமைச்சரின் அனுமதியைப் பெறல் வேண்டும்.

- ❖ 2012.01.01 - 2012.12.31 வரை 5112 உத்தியோகத்தர்களுக்கு நாட்டில் இருந்து வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- ❖ ஒரு நாளைக்கு கணிசமான அளவு விண்ணப்பங்கள் கிடைப்பதுடன் அவை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள முறையான நடைமுறையொன்று கையாளப்படுகின்றது.

- ❖ இது சம்பந்தமாக வெளியிடப்பட்டிருக்கும் அ.நி.சுற்றறிக்கைகள் மற்றும் ஜனாதிபதி செயலகத்தினால் இடைக்கிடை வெளியிடப்படும் அறிவுரைகளின்படி இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அரச நிறுவனங்களுக்கு பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் இடைக்கிடை அறிவுரை வழங்கப்படுகின்றது. அத்துடன், தகவல்களை முனவைக்கும் படிவங்களை முறையாகத் தயாரித்து தாமதமின்றி இந்த அலுவல்களை உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


- ❖ எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்ப முறையினைக் கையாண்டு விண்ணப்பங்களை முன்வைக்கவும், அனுமதி வழங்கவும் எதிர்பார்ப்பதுடன், அந்நடவடிக்கைகளை கணனி வலையமைப்பின் ஊடாக நிறைவேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ❖ இந்தத் தகவல்கள் அட்டவணை மற்றும் வரைபடங்களின் ஆதாரத்துடன் காட்டப்பட்டுள்ளது.

## அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறைகள் பற்றிய சாராம்சம்
## (01.01.2012 – 31.12.2012)

| இலக்கம் | அமைச்சு | அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | உயர் கல்வி அமைச்சு | 1654 | |
| 2 | மின்சக்தி மற்றும் சக்திவள அமைச்சு | 414 | |
| 3 | தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 297 | |
| 4 | சுற்றாடல் அமைச்சு | 191 | |
| 5 | விவசாய அமைச்சு | 178 | |
| 6 | சுகாதார அமைச்சு | 184 | |
| 7 | நீர்வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | 132 | |
| 8 | போக்குவரத்து அமைச்சு | 141 | |
| 9 | நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு | 126 | |
| 10 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சு | 132 | |
| 11 | கல்வி அமைச்சு | 119 | |
| 12 | மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு | 106 | |
| 13 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 140 | |
| 14 | சிவில் விமான சேவைகள் அமைச்சு | 106 | |
| 15 | அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 125 | |
| 16 | இளைஞர் விவகார மற்றும் திறனபிவிருத்தி அமைச்சு | 120 | |
| 17 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 100 | |
| | **மொத்தம்** | | **4265** |
| | **ஏனையவை(100 ஐ விட குறைவு)** | | |
| 18 | கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 78 | |
| 19 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு | 69 | |
| 20 | தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 48 | |
| 21 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | 47 | |
| 22 | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 33 | |
| 23 | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் | 39 | |
| 24 | வெளிவிவகார அமைச்சு | 53 | |
| 25 | நீதி அமைச்சு | 38 | |
| 26 | கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 36 | |
| 27 | இலங்கைப் பாராளுமன்றம் | 40 | |
| 28 | தபால் சேவைகள் அமைச்சு | 20 | |
| 29 | நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு | 28 | |
| 30 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 30 | |
| 31 | தொழில் அமைச்சு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 22 | |
| 32 | கமநல சேவைகள் மற்றும் வனவிலங்குகள் அமைச்சு | 33 | |
| 33 | தெங்கு அபிவிருத்தி அமைச்சு | 20 | |
| 34 | தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சு | 20 | |
| 35 | பெற்றோலிய வளக் கைத்தொழில் அமைச்சு | 19 | |
| 36 | விளையாட்டுத்துறை அமைச்சு | 18 | |
| 37 | பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு வர்த்தக அபிவிருத்தி அமைச்சு | 20 | |
| 38 | புத்த சாசன மற்றும் சமய விவகார அமைச்சு | 16 | |
| 39 | தேசிய உரிமைகள் அமைச்சு | 18 | |
| 40 | கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு | 12 | |
| 41 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 15 | |
| 42 | சுதேச வைத்திய அமைச்சு | 12 | |
| 43 | சமூக சேவைகள் அமைச்சு | 13 | |
| 44 | தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு | 18 | |
| 45 | உற்பத்தித்திறன் அபிவிருத்தி அமைச்சு | 7 | |

| | | | |
|---|---|---|---|
| 46 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 3 | |
| 47 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 3 | |
| 48 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 2 | |
| 49 | மீள்குடியேற்ற அமைச்சு | 2 | |
| 50 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 5 | |
| 51 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 2 | |
| 52 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 0 | |
| 53 | பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் பொதுமக்கள் அலுவல்கள் அமைச்சு | 0 | |
| 54 | பிரதம அமைச்சர் அலுவலகம் | 8 | |
| | **மொத்தம்** | | **847** |
| | **மொத்த எண்ணிக்கை** | | **5112** |




## 8) அமைச்சரவை நிருபம், பாராளுமன்ற அறிக்கை மற்றும் சட்ட மூலங்கள் தயாரித்தலும் முன்வைத்தலும் மற்றும் பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளித்தல்

- ❖ பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட சட்ட மூலங்கள் உட்பட ஏனைய தாபனங்கள் சார்பாக கௌரவ, பிரதம அமைச்சர் அவர்கள் முன்வைத்த அமைச்சரவை நிருபங்கள் மற்றும் கௌரவ பிரதம அமைச்சர் அவர்கள் நேரடியாக முன்வைத்த அமைச்சரவை நிருபங்கள் அமைச்சரவையின் செயலாளருக்கு அனுப்பப்படும்.

- ❖ இந்த நடவடிக்கையின் போது குறித்த நிருபம் மற்றும் இணைப்புக்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிப்பதும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் குறித்த அலுவலகத்திற்கு தெரிவிப்பதுடன் பின்னூட்டல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

- ❖ கௌரவ பிரதம அமைச்சர் ஊடாக பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படும் அறிக்கைகள்,சட்ட மூலங்கள் என்பன பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு அனுப்பப்படும். இங்கு சட்ட மூலங்கள் தயாரித்தல் திணைக்களம், சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

- ❖ இதற்கு மேலாக அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் கீழ் இருக்கின்ற மற்றும் பிரதம அமைச்சரின் அலுவலகத்துடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற கேள்விகளுக்கு பதில் அளிக்கும் நடவடிக்கையையும் பிரதம அமைச்சரின் அலுவலகம் மேற்கொள்கின்றது. அத்துடன் தேசிய ரீதியாக கேட்கப்படும் கேள்விகள் மற்றும் சபை ஒத்திவைக்கப்படும் போது கேட்கப்படும் கேள்விகள் சம்பந்தமாக பிரதம அமைச்சர் அலுவலகத்தினால் இணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 9) தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு மேம்பாடு

**பிரதம அமைச்சர் அலுவலகத்தில் இ - அரச கொள்கைக்கு உட்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் படி கீழ் காணப்படும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**


1. தகவல் தொழில்நுட்ப அலகை நிறுவுதல் மற்றும் நவீனமயப்படுத்தும் உத்தியோகத்தர்களை நியமித்தல்
2. பிரதம அமைச்சர் அலுவலகத்தின் இணையத்தளத்தினை மேலும் அபிவிருத்தி செய்தல்
3. கணனி மென்பொருள் பாதுகாப்புத் தொகுதியை நிறுவுதல்
4. களஞ்சியம், போக்குவரத்து, கொள்வனவு, உத்தியோகத்தர்களின் வரவு.்.வெளிச்செல்லல், அந்தரங்கக் கோவை, நிலையான சொத்து போன்ற விடயங்களுக்காக கணனித்தொழில்நுட்பத்தை பிரயோகித்தல்.
5. பதவியணியினரின் செயன்முறை பயிற்சித் தேவையை கண்டறிதலும் தேவையான பயிற்சியை வழங்கலும்
6. நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப செயன்முறை திட்டத்தினை தயாரித்தலும் அதன் படி நடைமுறைப்படுத்தலும்
7. தலைமை நவீனமயப்படுத்தும் உத்தியோகத்தர்களுககுத் தேவையான பயிற்சியை வழங்கல்
8. சகல உத்தியோகத்தர்களுக்கும் கணனி வசதியை வழங்கல்
9. அரச தகவல் வலையமைப்பில் நிறுவனத்தின் சேவை வழங்கல் விபரத்தை உட்படுத்தல்
10. சகல மென்பொருள்,வன்பொருள் மற்றும் இணையத்தளம் சம்பந்தமான நடவடிக்கைகளின் போது வெளியாரை ஈடுபடுத்தும் போது அதற்காக குறித்த ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டு அவற்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல்

இதற்கு மேலாக நிறுவனத்தின் உள்ளக நிருவாக நடவடிக்கைகளுக்காக மென் மேலும் கணனித் தொழில்நுட்பத்தை பிரயோகிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட அலுவல்களை மேற்கொள்வதற்காக இந்த வருடத்தின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான செலவினம் பற்றிய விபரம் அட்டவணை மற்றும் வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது.

# தகவல் தொழில் நுட்ப மேம்பாட்டுச் செலவினம் (01.01.2012 – 31.12.2012)

| 2012 | செலவு(ரூ.) |
|---|---|
| ஜனவரி | 114,152.71 |
| பெப்ரவரி | 114,152.71 |
| மார்ச் | 123,125.71 |
| ஏப்ரல் | 124,405.51 |
| மே | 147,633.11 |
| ஜூன் | 418,031.11 |
| ஜூலை | 103,871.11 |
| ஆகஸ்ட் | 285,077.52 |
| செபதெம்பர் | 103,871.11 |
| ஒக்தோபர் | 150,935.11 |
| நவம்பர் | 161,030.00 |
| டிசம்பர் | 157,537.00 |
| **மொத்தம்** | **2003,822.71** |



# 10) மனித வள அபிவிருத்தி

பிரதம அமைச்சர் அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 61 பேருக்கு 2012 ஆம் ஆண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சிகள் பிரதானமாக கீழ் குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்பட்டுள்ளன.

1. ஆங்கில மொழியை விருத்தி செய்தல்
2. கணனி தொழில் நுட்ப அறிவை விருத்தி செய்தல்
3. முகாமைத்துவ விடய அறிவை விருத்தி செய்தல்

- இதற்கு மேலாக அலுவலக ஊழியர்களின் தமிழ் மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஆசிரியர் ஒருவரினால் மட்டம் ஐஐஐ இற்கான தமிழ் மொழி வகுப்பு நடாத்தப்பட்டது.

- பதவி நிலை உத்தியோகத்தர்களின் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்யும் நோக்கில் பிரதம அமைச்சரின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளரின் வழி காட்டலின் கீழ் இரு கிழமைக்கு ஒரு முறை ஆங்கில மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைபெறுகின்றது.

- அத்துடன் வருடத்திற்கொருமுறை பயிற்சி நடவடிக்கையுடன் சம்பந்தப்பட்ட கள சுற்றுப்பயணம் ஒன்று ஏற்பாடு செய்யப்படுவதுடன், அங்கு பல்வேறு செயன்முறைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் பதவியணியினரின் ஆற்றல்களை விருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வருடம் இந்தச் சுற்றுப்பயணம் பதுளை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**EXPENDITURE REPORT - From 01.01.2012 to 31-12-2012**

**Project 1 - Office of the Prime Minister**

Head-2 **Program 1 - Civil Administration**

| Object | Category | Estimate-2012 | 2% cut 9% cut | Total | Supplementary. Allocation | F.R.66 Transfer | Total Estimate | Total Expenditure. Up to Dec | Balance |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **RECURRENT EXPENDITURE** | | | | | | | | |
| | **Personal Emoluments** | | | | | | | | |
| 001 | Salaries and Wages | 9,000,000 | | 9,000,000 | | | 9,000,000 | 8,775,970 | 224,030 |
| 002 | Overtime and Holiday Pay | 2,500,000 | | 2,500,000 | | 1,000,000 | 3,500,000 | 3,348,102 | 151,898 |
| 003 | Other Allowances | 5,000,000 | | 5,000,000 | 2,000,000 | | 7,000,000 | 6,556,764 | 443,236 |
| | **Travelling Expenses** | | | | | | | | |
| 101 | Domestic | 1,000,000 | | 1,000,000 | | 250,000 | 1,250,000 | 1,247,721 | 2,279 |
| 102 | Foreign | 5,200,000 | 1,000,000 | 4,200,000 | | | 4,200,000 | 3,091,061 | 1,108,939 |
| | **Supplies** | | | | | | | | |
| 201 | Stationery and Office Requisites | 2,650,000 | | 2,650,000 | | 94,507 | 2,744,507 | 2,744,507 | 1 |
| 202 | Fuel | 10,000,000 | | 10,000,000 | | 370,663 | 10,370,663 | 10,367,412 | 3,251 |
| 203 | Uniforms | 200,000 | | 200,000 | | (8,400) | 191,600 | 171,644 | 19,956 |
| | **Maintenance Expenditure** | | | | | | | | |
| 301 | Vehicles | 17,750,000 | | 17,750,000 | | (8,158,700) | 9,591,300 | 9,591,282 | 18 |
| 302 | Plant, Machinery and Equipment | 800,000 | | 800,000 | | (250,000) | 550,000 | 478,619 | 71,381 |
| 303 | Buildings | 1,500,000 | | 1,500,000 | | (1,003,000) | 497,000 | 142,684 | 354,316 |
| | **Contractual Services** | | | | | | | | |
| 401 | Transport | 150,000 | | 150,000 | | 210,000 | 360,000 | 358,900 | 1,100 |
| 402 | Postal and Communication | 2,500,000 | | 2,500,000 | | 1,748,120 | 4,248,120 | 4,248,119 | 1 |
| 403 | Electricity & water | 4,500,000 | | 4,500,000 | | 1,000,000 | 5,500,000 | 4,568,664 | 931,336 |
| 404 | Rents & Local Taxes | 2,000,000 | 1,500,000 | 500,000 | | (200,000) | 300,000 | 5,196 | 294,804 |
| 405(1) | Entertainments & Gifts | 11,000,000 | | 11,000,000 | | 1,866,882 | 12,866,882 | 12,866,881 | 1 |
| 405(2) | Other | 8,000,000 | | 8,000,000 | | 1,188,752 | 9,188,752 | 9,188,752 | 0 |
| 405(3) | Dep.of National Botanic Gradens | 4,000,000 | | 4,000,000 | | 1,000,000 | 5,000,000 | 4,986,896 | 13,104 |
| | **Recurrent Total** | 87,750,000 | 2,500,000 | 85,250,000 | | (891,176) | 86,358,824 | 82,739,174 | 3,619,650 |
| | **Rehabilitation and Improvement of Capital Assets** | | | | | | | | |
| 001 | Buildings & Structures | 5,500,000 | | 5,500,000 | | | 5,500,000 | 4,383,176 | 1,116,824 |
| 002 | Plant, Machinery and Equipment | 1,000,000 | | 1,000,000 | | | 1,000,000 | 332,381 | 667,619 |
| 003 | Vehicles | 2,000,000 | 1,000,000 | 1,000,000 | | | 1,000,000 | 156,479 | 843,521 |
| | **Acquisition of Capital Assets** | | | | | | - | | |
| 101 | Vehicles | | | | | | - | | |
| 102 | Furniture and Office Equipment | 5,000,000 | | 5,000,000 | | | 5,000,000 | 2,533,816 | 2,466,184 |
| 103 | Plant, Machinery and Equipment | 1,500,000 | | 1,500,000 | | | 1,500,000 | 125,100 | 1,374,900 |
| | **Capital Total** | 15,000,000 | 1,000,000 | 14,000,000 | | - | 14,000,000 | 7,530,953 | 6,469,047 |

**Head - 2** **Program 1 - Civil Administration**

| Object Code | Category | Estimate-2012 | 2% 9%cut | Total | Sup plemen. Allo cation | F.R.66 Transfer | Total Estimate | Total Expen.. Up to Dec | Balance |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **RECURRENT EXPENDITURE** | | | | | | | | |
| | **Personal Emoluments** | | | | | | | | |
| 1001 | Salaries and Wages | 30,500,000 | | 30,500,000 | | | 30,500,000 | 30,227,518 | 272,482 |
| 1002 | Overtime and Holiday Pay | 7,200,000 | | 7,200,000 | | -304250 | 6,895,750 | 6,895,703 | 47 |
| 1003 | Other Allowances | 20,000,000 | | 20,000,000 | | 3508273 | 23,508,273 | 23,508,273 | 0 |
| | **Travelling Expenses** | | | | | | - | | - |
| 1101 | Domestic | 1,700,000 | | 1,700,000 | | -150000 | 1,550,000 | 1,543,529 | 6,471 |
| 1102 | Foreign | 1,800,000 | 714,000 | 1,086,000 | | -259750 | 826,250 | 728,148 | 98,102 |
| | **Supplies** | | | - | | | - | | - |
| 1201 | Stationery and Office Requisites | 2,300,000 | | 2,300,000 | | | 2,300,000 | 2,104,499 | 195,501 |
| 1202 | Fuel | 10,000,000 | | 10,000,000 | | -2322125 | 7,677,875 | 7,650,076 | 27,799 |
| 1203 | Uniforms | 325,000 | | 325,000 | | 8,400 | 333,400 | 325,386 | 8,014 |
| | **Maintenance Expenditure** | | | - | | | - | | - |
| 1301 | Vehicles | 7,250,000 | | 7,250,000 | | (354,000) | 6,896,000 | 6,895,174 | 826 |
| 1302 | Plant, Machinery and Equipment | 800,000 | | 800,000 | | 250,000 | 1,050,000 | 961,101 | 88,899 |
| 1303 | Buildings | 800,000 | | 800,000 | | (640,000) | 160,000 | 79,428 | 80,572 |
| | **Contractual Services** | | | - | | | - | | - |
| 1401 | Transport | 750,000 | | 750,000 | | (210,000) | 540,000 | 344,848 | 195,152 |
| 1402 | Postal & commiunication | 4,000,000 | 500,000 | 3,500,000 | | (1,200,000) | 2,300,000 | 2,033,694 | 266,306 |
| 1403 | Electricity & water | 6,000,000 | | 6,000,000 | | 1,500,000 | 7,500,000 | 6,760,123 | 739,877 |
| 1404 | Rents & Local Taxes | 300,000 | | 300,000 | | 200,000 | 500,000 | 329,375 | 170,625 |
| 1405 | Other | 3,500,000 | | 3,500,000 | | 589,628 | 4,089,628 | 4,089,628 | 0 |
| | **Transfers** | | | - | | | - | | - |
| 1506 | Property Loan Interest | 750,000 | | 750,000 | | 275,000 | 1,025,000 | 1,009,985 | 15,015 |
| | **Recurrent Total** | 97,975,000 | | 97,975,000 | | 891,176 | 97,652,176 | 2,165,687 | 95,486,489 |
| | **CAPITAL EXPENDITURE** | | | | | | | | |
| | **Rehabilitation and Improvement of Capital Assets** | | | | | | | | |
| 2001 | Buildings and Structures | 9,000,000 | | 9,000,000 | | | 9,000,000 | 3,248,299 | 5,751,701 |
| 2002 | Plant, Machinery and Equipment | 550,000 | | 550,000 | | | 550,000 | | 550,000 |
| 2003 | Vehicles | 550,000 | | 550,000 | | | 550,000 | 398,001 | 151,999 |
| | **Acquisition of Capital** | | | | | | | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ***Assets*** | | | - | | | - | | - |
| *101* | *Vehicles* | | | - | *9,500,000* | *36,788* | *9,536,788* | *9,536,788* | *0* |
| *102* | *Furniture and Office Equipment* | *2,750,000* | | *2,750,000* | | *(36,788)* | *2,713,212* | *2,191,287* | *521,925* |
| *103* | *Plant, Machinery and Equipment* | *3,650,000* | | *3,650,000* | | | *3,650,000* | *112,826* | *3,537,174* |
| *104* | *Building&* | | | - | | *5,000,000* | *5,000,000* | | *5,000,000* |
| | ***Human Resource Development*** | | | - | | | - | | - |
| *401* | *Knowledge Enchancement & Ins* | *400,000* | | *400,000* | | | *400,000* | *359,505* | *40,495* |
| | ***Improving Positive Attitudes of Sri lanka*** | | | | | | - | | - |
| *an-01* | *Knowledge Enchancement & Ins* | *40,000,000* | *5,471,000* | *34,529,000* | | *(5,000,000)* | *29,529,000* | *25,335,411* | *4,193,589* |
| | ***Capital Total*** | *56,900,000* | *5,471,000* | *51,429,000* | *9,500,000* | - | *60,929,000* | *41,182,117* | *19,746,883* |